# DEPOSITION OF WITNESS

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.**

| | | |
|---|---|---|
| **Case No** | **: DVC.07/2022** | **Date:01.03.2024** |
| **Deposition of Witness for** | **: ம.சா.1** | |
| **Name** | **: கௌரி** | |

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

1. 1ம் எதிர்மனுதாரர் மூன்றரை பவுன் செயின் கேட்டதாக தெரிவித்துள்ள நிலையில் எந்த தேதியில் கேட்டார் எந்த தேதியில் நாங்கள் கொடுத்தோம் என்ற விவரத்தை எனது மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் தேதி குறிப்பாக சொல்லவில்லை. நான் சொல்வதுபோல் மேற்படி செயின் கொடுத்திருந்தால் தேதியை மனுவில் தெரிவித்திருப்பேன் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரருக்கு காலில் அடிப்பட்டிருந்த போது நான் பார்த்தாக கூறியுள்ள நிலையில் எந்த தேதியில் பார்த்தேன் என்றால் தேதி ஞாபகமில்லை 2020 ஜனவரி மாதத்தில் பார்த்தோம். 1ம் எதிர்மனுதாரரின் மருத்துவ செலவிற்கு பணம் கொடுத்தாக கூறியுள்ள நிலையில் யார் கொடுத்தார் என்றால் எனது அப்பா கொடுத்தார். மேற்படி சங்கதியை எனக்கு நேரிடியாக தெரியுமா என்றால் அப்பா பணம் கொடுக்கும்போது நான் அருகில் தான் இருந்தேன். நான் சொல்வது போல் 1ம் எதிர்மனுதாரருக்கு காலில் அடிப்படவில்லை என்றும், நான் அவரை சென்று பார்க்கவில்லை என்றும், எனது தந்தை பணம் கொடுக்கவில்லை என்றும் நான் இந்த வழக்கிற்காக அவ்வாறு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2. 1ம் எதிர்மனுதாரர் என்ன வேலை செய்து வருகிறார் என்றால் ேஹாமியோபதி மருத்துவராக பணியாற்றி வருகிறார். எத்தனை வருடமாக மருத்துவராக பணியாற்றி வருகிறார் என்றால் திருமணத்தின்போது 5 வருடமாக மருத்துவராக பணியாற்றி வருவதாக 1ம் எதிர்மனுதாரர் என்னிடம் சொன்னார். 1ம்

எதிர்மனுதாரர் மருத்துவமனை வைத்திருந்த கட்டிடம் அவருடைய சொந்த கட்டிடமா அல்லது வாடகை கட்டிமா என்றால் வாடகை கட்டிடம். மேற்படி கட்டிடத்தின் உரிமையாளர் யார் என்றால் முருகேசன் என்பவர் ஆகும். மேற்படி கட்டிடத்தின் வாடகை மற்றும் அட்வான்ஸ் தொகை எவ்வளவு என்றால் தெரியாது. மேற்படி கட்டிடத்தின் உரிமையாளர் முருகேசன் என்பது எனக்கு எப்படி தெரியும் என்றால் 1ம் எதிர்மனுதாரர் மீது முருகேசன் காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்திருந்தார் அதனால் தெரியும்.

3. மேற்படி வழக்குப்பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றும் அந்த வழக்கு சம்பந்தமாக 1ம் எதிர்மனுதாரர் என்னிடம் பணம் பெற்றார் என்று கூறுவது பொய் என்றால் சரியல்ல. வழக்கை பற்றி எனக்கு ஏற்கனவே தெரிந்திருந்தால் இந்த மனுவில் அதுப்பற்றி கூறியிருப்பேன் என்றாலும், மேற்படி வழக்கின் உத்தரவு நகலை மனுவுடனே தாக்கல் செய்திருப்பேன் என்றாலும், பின்னிட்டு மேற்படி வழக்கின் நகலை எடுத்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. செல்வராணி என்பவர் என்னை தகாத வார்த்தைகளில் திட்டினாரா என்றால் இல்லை. எந்த தேதியில் 1ம் எதிர்மனுதாரர் தனியறையில் என்னை அடைத்து கொடுமைப்படுத்தினார் என்றால் 12.05.2020 ம் தேதி ஆகும். மேற்படி சம்பவம் தொடர்பாக நான் காவல் நிலையத்தில் புகார் அளித்தேனா என்றால் என்னை புகார் கொடுத்தால் கொன்று விடுவதாக மிரட்டியதால் உயிருக்கு பயந்து புகார் கொடுக்கவில்லை. அதன்பிறகு எந்த தேதியில் நான் என் பெற்றோர் வீட்டிற்கு வந்தேன் என்றால் 13.05.2020 ம் தேதி 1ம் எதிர்மனுதாரர் என்னை அழைத்து வந்து பெற்றோர் வீட்டில் விட்டுவிட்டு சென்றுவிட்டார்.

4. அதன்பிறகு புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் உண்மையில் அதுபோன்று சம்பவம் நடந்திருந்தால் காவல்நிலையத்தில் நான் புகார் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. பின்னிட்டு 13.07.2022 ம் தேதி சங்ககிரி காவல்நிலையத்தில் நான் எதிர்மனுதாரர்கள் மீது புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல்

செய்வதற்காகவே மேற்படி தேதியில் பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி தேதிக்கு முன்னர் எதிர்மனுதாரர்கள் மீது எந்தவித புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

14.08.2022ம் தேதி 1ம் எதிர்மனுதாரர் வரதட்சனை கேட்டு கொலை மிரட்டல் விடுத்தார் என்று கூறுவது பொய் என்றால் சரியல்ல. வீட்டோடு மாப்பிள்ளையாக இருக்கும்படி 1ம் எதிர்மனுதாரரை நாங்கள் அழைத்தும் அவர் வரவில்லை என்பதால் அவர்மீது இந்த பொய்யான மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

5. சங்ககிரி அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் 13.07.2022ம் தேதி நான் கொடுத்த புகார் சம்பந்தமாக விசாரணைக்கு ஆஜரான 1ம் எதிர்மனுதாரரிடம் நான் ரூ.5 லட்சம் தரவேண்டும் என்று நான் கேட்டேன் என்றும் தர மறுத்தால் பொய் புகார் கொடுத்து அவர்மீது பொய் வழக்கு தாக்கல் செய்வேன் என்று நான் மிரட்டியதால் அதன் பிறகு அவர் விசாரணைக்கு காவல் நிலையத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல. நான் கேட்டபடி அவர்கள் பணம் கொடுக்காததால் எதிர்மனுதாரர்கள் மீது இந்த பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

ஒப்பம். கௌரி

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2024.03.01 17:00:05 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
சங்ககிரி.